1973 மார்ச் 6]

(இ) ஆம் எனில், தற்போது அத்திட்டம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) வினா எழவில்லை.

அரிசன மாணவர் விடுதிகளுக்குக் கட்டடங்கள்

* 256 வினா—திரு. மூ. மாரிமுத்து : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தம்மம்பட்டி, செங்கல்லி, ஆறகளூர் ஆகிய இடங்களில் உள்ள மாணவரில்லங்களுக்கு சொந்தத்தில் கட்டடங்கள் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது கட்டடங்கள் கட்டப்படும்?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) அரசின் ஆய்வில் இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. க. நாகராஜன் : உயர்நிலைப் பள்ளிகள் உள்ள எல்லா இடங்களிலும் இதுபோன்ற விடுதிகளை விரைந்து ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் தாழ்த்தப்பட்ட, பின் தங்கிய வகுப்பினருக்கு விடுதிகள் கட்டுவதற்காக இரண்டு கோடி ரூபாய் வங்கிகள் மூலம் கடன் உதவி பெற்று விடுதி கட்டுவதற்கான திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் திட்டம் நிறைவேறும்போது, கூடுமானவரையில் ஹரிஜன மாணவர்களுக்கு விடுதிகள் கட்டிக்கொடுக்கிற திட்டம் விரைவுபடுத்தப்படும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : இந்த ஹரிஜன ஹாஸ்டல்களுக்கு கட்டடங்கள் ஹரிஜன வெல்பேர் பண்டிலிருந்து கட்டுவது என்பது நீண்ட நாட்களாகும் என்பதால் ஹெளஸிங் போர்ட்

மூலம் வாடகைக்கு ஹரிஜன வெல்பேர் டிப்பார்ட்மென்டுக்கு கட்டிக்கொடுக்க வேண்டுமென்று ஹௌஸிங் போர்ட்டுக்கு சிபார்சு செய்வார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : நான் முன்னால் கூறிய திட்டம் கடன் உதவி கொடுப்பது, ஹௌஸிங் போர்ட் மூலம் அந்தக் கட்டடங்களைக் கட்டத்தான் அரசு முடிவு செய்திருக்கிறது.

காவிரிப் பாசன வளர்ச்சித் திட்டங்கள்

* 257 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காவிரிப் பாசன வளர்ச்சித் திட்டங்களுக்காக 1971–72 ஆம் ஆண்டில் தமிழகத்திற்கு மத்திய அரசு ஒதுக்கியுள்ள தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : காவிரிப்பாசன மேம்பாட்டுத் திட்டங்கள் நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மாநில அரசுத் திட்டத்தின் கீழ் வருகின்றன. மாநில திட்டப்பணிகளுக்கு, மத்திய அரசு, மொத்தக் கடன்களையும், மொத்த மானியங்களையும் வழங்குகிறது. திட்டங்களுக்கு தனிப் பட்டு மத்திய அரசு நிதியுதவி எதும் செய்வதில்லை. ஆகவே, காவிரிப் பாசன மேம்பாட்டுத் திட்டங்களுக்காக, 1971-72-ம் ஆண்டில் மத்திய அரசு வழங்கிய நிதி உதவியைத் திட்டவட்டமாகக் குறிப்பிடவியலாது.

திரு. ஆ. பரந்தாமன் : காவிரிப் பாசன வளர்ச்சித் திட்டத்திற்காக மத்திய அரசோடு தொடர்பு கொண்டு அக்ரிகல்ச்சரல் ரீ பைனான்ஸிங் கார்ப்பரேஷன் மூலம், வேளாண்மை மறு நிதிக் கழகம்மூலம் கடன் வசதி பெற வாய்ப்புகள் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : உலக வங்கி நிபுணர்கள் இங்கே வருகை தந்திருந்தார்கள். அவர்கள் காவிரி டெல்டாவைப் பார்வையிட்ட பிறகு இதுபோன்ற சீரமைப்பதற்கு உள்ள திட்டத்தை மனநிறைவோடு ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்

1973 மார்ச் 6] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

என்றாலும்கூட மத்திய அரசின் அனுமதி இன்னும் கிடைக்கவில்லை. தஞ்சை மாவட்டம் பழைய காவிரி கயவாய் பாசனத் திட்டத்தை சீர்திருத்தி மேம்படுத்தும் பணிகள் நிறைவேற்றப் படாமலே உள்ளன. எனவே 1972-73 முதல் தொடங்கி அடுத்த நான்காண்டுகளில் 1,298.33 லட்சம் ரூபாய் செலவில் பழைய காவிரி கயவாய்ப் பாசனத் திட்டத்தை விரைவாக சீர்திருத்தி மேம்படுத்தும் பணிகளை மேற்கொள்வதற்கான திட்டம் ஒன்றுக்கு அரசு அண்மையில் ஏற்பளித்துள்ளது. 1972-73-ம் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இதற்காக ரூ. 244.50 லட்சம் ஒதுக்கப் பட்டிருக்கிறது.

சாம்பார்பள்ளத்திற்குக் கரை அமைப்பு

* 258 வினா—திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூர் தாலுக்கா தார்காடு கிராமத்தில் சாம்பார் பள்ளத்தில் கரையமைப்பது சம்பந்தமாக ரூ. 50,000 மதிப்பீட்டில் திட்டம் ஒன்று அரசாங்க ஆலோசனையில் வந்திருக்கிறதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். சுரேந்திரன் : இந்தத் திட்டம் சிறிய ஏரித் திட்டமாக இருக்கிற காரணத்தாலும் இவ்வளவு நீண்ட நாட்களாக பிரதேச மக்களால் கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கும் காரணத்தாலும் இதை இனிமேலாவது ஆராய்ந்து நிறைவேற்ற அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சாம்பார்பள்ளத்தில் கரை அமைப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா என்று கேட்டதற்கு 'இல்லை' என்று பதில் சொன்னேன். சாம்பார்பள்ளத்தில் குட்டை அமைப்பதற்காக திட்டம் 67,000 ரூபாயில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, இந்தத் திட்டத்திற்காக 5½ ஏக்கர் வன நிலங்கள் தேவையாக இருக்கும் காரணத்தால் வனத்துறை ஒப்புதலுக்காக பொறியாளர் தொடர்பு கொண்டுள்ளார்.

[1973 மார்ச் 6

கூட்டுறவு பழம் பயிரிடு பண்ணை

*259 வினா—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவுத்துறையில் பழம் பயிரிட பண்ணை ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இல்லை.

திரு. கே. எ. வகாப்: வேலூரில் உள்ள பழப் பதனிடும் தொழிற்சாலைக்கு இப்படிப்பட்ட பண்ணை ஒன்று வேண்டுமென்று அங்குள்ள அதிகாரிகள் முயற்சி எடுத்து அதற்காக இராணிப் பேட்டையில் 200 ஏக்கர் நிலம் ஒதுக்கித் தருவீர்களா என்று கேட்டார்கள். அப்படிப்பட்ட திட்டங்களை ஏற்படுத்தி அந்தத் தொழிற்சாலை நல்ல முறையில் நடக்க இனியாவது அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: வட ஆற்காடு மாவட்டத்தில் வேலூரில் அமைக்கப்பட்டிருக்கும் பழம் பதனிடும் தொழிற்சாலை கூட்டுறவுத் துறையில் செயல்பட்டு வருகிறது. ஆனாலும் அது ஒரு முன்னோடித் தொழிற்சாலை. அங்கு சோதனைகள் நடைபெற்றன. தக்காளிப் பழத்தைப் பதனிடுதல், சாறு பிழிதல், மாம்பழத்தைப் பதனிடுதல், சாறு பிழிதல்; அன்னாசிப் பழத்தைப் பதனிடுதல், சாறு பிழிதல் என்று இவைகளை எல்லாம் சோதனை செய்து பார்த்த பிறகு அன்னாசிப் பழத்தைப் பதனிட்டு டின்களில் அடைப்பது லாபகரமாகவும், வெற்றிகரமாகவும் நடக்கும் என்று தெரிந்து அதற்குத் தேவைப்படும் அன்னாசிப் பழம் தற்போது கேரளத்திலிருந்து வாங்க வேண்டியிருப்பதால், வட ஆற்காடு மாவட்டத்திலேயே வளர்க்க முடியும் என்பதற்கான சோதனைகளைச் செய்து பார்த்து நன்றாக விளையும் என்பதால் அதை அதிகமாகப் பயிரிட முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. எம். ஏ. லத்தீப்: இத்தகைய பழத் தோட்டங்களை வட ஆற்காடு மாவட்டத்தில் ஏற்படுத்த முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன என்பது அமைச்சர் அவர்கள் பதிலிலிருந்து தெரிய வருகிறது. எந்தெந்த இடங்களில் இப்படிப்பட்ட முயற்சிகள்